செ.வெ.எண்.55 நாள்.22.12.2017.

திருநெல்வேலி மாநகராட்சி வார்டு எண்.11 பொட்டல், திருவண்ணநாதபுரம், காயத்ரி தெரு ஆகிய பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் மொகா தூய்மை மற்றும் கொசு ஒழிப்பு பணிகளை வீடு, வீடாக நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

-------

திருநெல்வேலி மாநகராட்சி வார்டு எண்.11 திருவண்ணநாதபுரம், பொட்டல், காயத்ரி தெரு ஆகிய பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (22.12.2017) மொகா தூய்மை மற்றும் கொசு ஒழிப்பு பணிகளை வீடு, வீடாக நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

இப்பகுதியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அதிகாலையில் வீடு, வீடாக சென்று மாநகராட்சி மூலம் செய்யப்பட்டு வரும் மெகா துப்புரவு பணி மற்றும் கொசு ஒழிப்பு பணிகளை ஆய்வு செய்தார்.

வீடுகளில் உள்ள பகுதிகளுக்கு சென்று குடிநீர் தொட்டிகள், டிரம்கள் உள்ளிட்டவைகள் சுத்தமாக பராமரிக்கப்பட்டுகிறதா என ஆய்வு செய்தார். கொசு ஒழிப்பு புகை மருந்து அனைத்து வீடுகளில் அடிக்க வேண்டுமெனவும் உத்தரவிட்டார். பல்வேறு தெருக்களில் உள்ள வீடுகளுக்கு சென்று ஆய்வு செய்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்கள் மற்றும் பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகளிடம் டெங்கு விழிப்புணர்வு குறித்தும், சுகாதாரம் குறித்தும் எடுத்துரைத்தார்.

சுகாதார அலுவலர்கள் இப்பகுதிகளில் உள்ள குப்பைகளை முழுமையாக சுத்தம் செய்திட வேண்டும். மீண்டும் கொசு உற்பத்தி ஆகும் வகையில் குப்பைகளை போட்டு வைக்கும் வீடுகளுக்கு நோட்டீஸ் கொடுக்கவும், அபராதம் விதிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென உத்தரவிட்டார்.

ஆய்வின் போது, மாநகராட்சி ஆணையாளர் (பொ) திரு.நாராயண நாயர், மாநகராட்சி நகர்நல அலுவலர் மரு.பொற்செல்வன், உதவி செயற்பொறியாளர் திரு.பாஸ்கரன், வட்டாட்சியர் திரு.தங்கராஜ், இளநிலை பொறியாளர் திரு.இசக்கி ரமேஷ், சுகாதார அலுவலர் திரு.சுப்பிரமணியன், சுகாதார ஆய்வாளர் திரு.இளங்கோ மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.